**Vol. 6, Issue – 2** **Pg. No. 11 - 18**

புதிய அவையம்

மின்னிதழ்

ISSN : 2456-821X

SACRED HEART RESEARCH PUBLICATIONS

***மனித வாழ்வும் நிலையாமையும்***

*திருமதி, ந.கனிமொழி,*

*உதவிப் பேராசிரியர்,*

*செயின்ட் ஜோசப் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,*

*ஓசூர் – 635 126*

=================================================================

*முன்னுரை*

*நீடித்து நிலைத்து நிற்கின்ற இவ்வுலகத்தில் நிலையில்லாத மனிதனாய் பிறந்த ஒவ்வொருவரும் நல்ல அறச்செயல்களைச் செய்ய வேண்டும் என்பதே நிலையாமையின் தத்துவமாகும். நிலையாமையின் தத்துவத்தை ஒருவன் புரிந்துக் கொள்வதில் தான் வாழ்க்கையின் அடிப்படைத் தன்மை அடங்கியிருக்கிறது. ஒவ்வொரு மனிதனும் வெளித்தோற்றத்தின் மீதும், பொருள் மீதும், இளமை மீதும் பேராசைக் கொள்ளாமல் ஆசையே எல்லாத் துன்பத்திற்கும் அடிப்படைக் காரணம் என்பதை உணரவேண்டும். இவ்வுலகில் இருக்கின்ற பொருட்கள் அனைத்தும் ஒரு நாள் அழியக் கூடியதே அதுவே இயற்கையின் நியதி. ஆகவே மனிதர்கள் நிலையானது என்று நினைக்கும் இவ்வுலகில் இளமை, யாக்கை, பொருள் இவை மூன்றும் எவ்வகையில் நிலையற்றது என்பதை இக்கட்டுரையின் வழி காண்போம்.*

*இளமை நிலையாமை*

*ஆடை, ஆபரணங்கள் வாசனைத் திரவியங்கள் போன்றவற்றால் நாம் நம்மை அழகுப்படுத்திக் கொண்டு மகிழ்ச்சி அடைகிறோம். அதுவே இளமை பருவத்தின் குணம். பூக்கள் காலையில் மலர்ந்து மாலையில் வாடி விடுவது போல் தான் இளமையும். ஒவ்வொரு நாளும் முடியும் போதும் நம் வாழ்நாளில் ஒரு நாள் குறைந்து விடுகிறது. இதை உணராத மனிதர்கள் தங்களுடைய இளமைக் காலத்தை நிலையானது என்று நினைத்து வாழ்கின்றனர். முடிவை நோக்கி தொடரும் பயணம் தான் நம் வாழ்க்கை. ஒவ்வொரு பருவமும் முடிந்து இறுதியாய் மூப்பும் அடைந்து உயிரை விடுகின்றனர். ஒவ்வொரு பருவமும் முடியும் போதும் மனிதன் வருந்துவதில்லை இறுதியாய் மூப்படைந்து இறக்கும் போது மட்டுமே அழுகின்றான். இச்செயலை ஆசிரியர்*

*“பாளையாம் தன்மை செத்தும்*
*பாலனாம் தன்மை செத்தும்*
*காளையாம் தன்மை செத்தும்*
*காமுறும் இளமை செத்தும்*
*மீளும்இவ் இயல்பும் இன்னே*
*மேல்வரு மூப்பும் ஆகி*
*நாளும் நாள் சாகின் றாமால்*
*நமக்கு நாம் அழாதது என்னோ![1] (குண்டலகேசி– 9)*

*என்றுக் கூறுகிறார். மனிதனுடைய வாழ்நாளில் இளமைப் பருவம் என்பது மிகவும் முக்கியமான காலக்கட்டம் ஆகும். ஏனெனில் பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட பருவம் தான் இளமை. அதுமட்டுமல்லாமல் உடலும், மனமும் உறுதியோடு இருக்கக்கூடிய பருவமாகும். இதே போல் தான் இளமையும் தேய்ந்து ஒழியக் கூடியது என்பதை திருமூலர்*

*” தேய்ந்துஅற்று ஒழிந்த இளமை கடைமுறை”[2] (திருமந்திரம் – 179)*

*இளமையானது ஆற்றுநீர் ஓடுதல் போல மிக வேகமாக ஓடி முடிந்து விடும் தன்மையுடையது. நாம் மூப்பு அடையும் போது நம் தலையில் முடிகள் நரைக்க தொடங்கிவிடுகின்றன. இச்செயல் மூலம் இறப்பு நம்மை நெருங்குகின்றது என்பதை நாம் உணர வேண்டும். இந்த உடலும் இளமையும் நிலையில்லாதது என்பதை அறிந்து அதன் மீது பற்றுக்கொள்ளாமலும் இருக்கவேண்டும். என்ற செய்தியினை*

*“வேல்கண் மடவார் விழைவு ஒழியயாம் விழையக்*

கோல்கண் நெறிகாட்டக் கொல்கூற்று உழையதாம்

நாற்பது இகந்தாம் நரைத்தூதும் வந்தது இனி

நீத்தல் துணிவாம் நிலையாது இளமையே"[3]

(வளையாபதி பாடல் 40) என்கிறார் ஆசிரியர்.

இளமைப் பருவமானது குளிர்ச்சி மிக்க சோலையில் உள்ள பயனைத் தரும் மரங்களெல்லாம் பழங்கள் உதிர்ந்து வீழ்ந்தாற்போல் ஆகும்.

"பனிபடு சோலைப் பயன்மர மெல்லாம்

கனியுதிர்ந்து வீழ்ந்தற் றின்மை"[4] (நாலடியார் – 17)

மூப்புநிலையடைந்தவர் மீண்டும் இளமை பருவம் வேண்டும் என்று நினைத்தாலும் பெறமுடியாது. "முதிர்ந்தோர் இளமை அழிந்தும் எய்தார்"[5] (நற்றிணை – 314) ஆகவே, "காற்று உள்ள போதே தூற்றிக் கொள்" என்ற பழமொழி போல் இளமையாக இருக்கும் போதே (அதாவது உடல் வலிமையாக இருக்கும் போதே) செய்ய வேண்டிய அனைத்து அறங்களையும் செய்வது சாலச் சிறந்தது ஆகும்.

இளமை என்பது நீரில் தோன்றும் நீர்க்குமிழி போல தோன்றிய சில நொடிகளில் மறைந்து விடும். எனவே மற்றவருக்கு உதவ நினைத்தால் அதை உடனே செய்து விட வேண்டும். தள்ளிப் போடக் கூடாது. ஏனெனில் வாழ்க்கை நிலையற்றது என்பதை எப்போதும் நம் மனத்தில் நிலை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

யாக்கை நிலையாமை

"ஆறிலுஞ் சாவு நூறிலும் சாவு" என்பது போல் உலகில் பிறந்த எல்லோரும் ஒரு நாள் கண்டிப்பாக சாகத்தான் வேண்டும், ஒருவனுடைய ஆயுட்காலம் இவ்வளவு நாட்கள் என்று யாராலும் உறுதியாக சொல்லிவிட முடியாது என்பதை,

"வாழ்நாள் வகையளவு அறிஞரும் இல்லை"[6] (நற்றிணை 314)

என்று சங்க இலக்கியமான நற்றிணையின் பாடல்வரி மூலம் அறியலாம். எலும்புகளும், தசைகளும், உதிரமும் ஆகியவையே யாக்கையாகும். அதன்பால் அன்பு வைத்து அறம் மறந்து கிடக்கிறார்கள் மக்கள். இதையே திருக்குறளானது

"அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்கு

*என்புதோல் போர்த்த உடம்பு"*[7] என்று *(திருக்குறள் – 80)* எடுத்துக் கூறுகிறது.

*நாம் எடுத்திருக்கும் இந்த பிறப்பானது நமது (ஊழ்வினையின்) வினையின் பயனினாலே வந்து வாய்த்தது என்பதை உணர வேண்டும் அதுவே, இனிவரும் காலங்களில் நல்வினை தீவினைகளாகிய புண்ணிய பாவங்கட்கும் உரிய விளைநிலமாக அமைந்தது. இக்கூற்றினை ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை*

*"வினையின் வந்தது, வினைக்குவிளை வாயது*

*புனைவன நீங்கிற் புலால்புறத் திடுவது*

*மூப்புவிளி வுடையது தீப்பிணி இருக்கை*

*பற்றின் பற்றிடம் குற்றக் கொள்கலம்"*[8]

*என்கிறது. ( மணிமேகலை – 4 பா.வ – 113-116)*

*நமது ஆன்மாவானது மாறி மாறி மீண்டும் இறந்து பிறந்து வரும் தன்மையுடையது. அதாவது உறங்கி விழிப்பதைப் போன்றதாகும்.*

*"பிறந்தவர் சாதலும், இறந்தவர் பிறத்தலும்*

*உறங்கலும் விழித்தலும் போன்றது உண்மையின்"*[9]

*என்று விளக்குகிறது மணிமேகலை ( மணிமேகலை - 16 )*

*படைப்பு கடவுளான பிரம்மனிடம் வேண்டிப் பெற்று பத்துமாதங்களில் உருவான உடம்பை எடுத்து ஆன்மாவனது கெட்டவழிகளில் கூத்தாடிக் கூத்தாடிப் தோண்டியை உடைப்பது போல உடைத்து மீண்டும் பெற முடியாத நிலை உருவாயிற்று என்றக் கருத்தை கீழ்க்கண்ட பாடல்வரிகளில் கடுவெளி சித்தர் கூறுகிறார்.*

*"நந்தவனத்திலோர் ஆண்டி – அவன்*

*நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்*

*கொண்டு வந்தான் ஒரு தோண்டி-மெத்தக்*

கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி"[10]

என்று பாடுகிறார்.

வாழ்க்கையின் நிலையாமையை புரிந்து இறப்பு பற்றிய தெளிவு ஒரு மனிதனிடம் வந்து விட்டால் அவனுடைய தீய எண்ணங்கள் அவனை விட்டு கண்டிப்பாக அகன்று விடும். அரசனாக இருந்தாலும் சரி, ஆண்டியாக இருந்தாலும் சரி ஒரு நாள் சாகத்தான் வேண்டும். ஆகவே, இருக்கும் போதே நல்லறங்களை செய்து விடுவது நல்லதாகும். உயிரே நிரந்தரமாக இல்லாத போது நாம் நம் உறவுகளுக்காக நிரந்தரமாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறோம். புல் நுனியிலிருக்கும் நீர்த்துளியைப் போல் நிலையில்லாத தன்மையுடையது இந்த உடம்பு என்று எண்ணி இப்பொழுதே அறவினைகளை செய்ய வேண்டும். இச்செய்தினை பதினெண்கீழ்க்கணக்கு நூலான நாலடியார் தெளிவாக எடுத்து இயம்புகிறது.

"புல்நுனிமேல் நீர்மேல் நிலையாமை என்றெண்ணி

இன்னினியே செய்க அறவினை"[11] ( நாலடியார் – 29 )

"படுமழை மொக்குளில் பல்காலும் தோன்றிக்

கெடுமிதோர் யாக்கையென் றெண்ணி"[12] (நாலடியார் – 27)

மழை பொழியும் போது நீரிலே தோன்றும் குமிழி போல பலமுறை தோன்றி அழியும் ஒரு வகை பொருள் இந்த உடம்பு எனக் கருதி இப்பிறவி துன்பத்தை நல்அறங்கள் செய்வதன் மூலம் போக்கி கொள்ள முடியும். வெளியே விட்ட மூச்சுக் காற்றானது உள்ளே செல்லவில்லை என்றால் அந்த நிகழ்வு இறப்பு என்றாகிவிடுகிறது. பின்னர் அந்த உடலானது பயனற்றதாகி அழிந்துவிடும். நிலையில்லாமல் அழியக்கூடியதான இந்த உடலை உயர்ந்தது என்று எண்ணி அதன் மீது ஆசை வைக்க கூடாது என்று வளையாபதி கூறுகிறது.

பொருள் நிலையற்றது

"செல்வத்துப் பயனே ஈதல்"[13] என்று புறநானூறு (189) கூறுகிறது. அதாவது செல்வத்தைப் பிறருடன் பகிர்ந்து கொள்வதில் தான் செல்வத்தைப் பெற்றதின் பயனே உள்ளது. ஏனெனில் செல்வமானது நிலையில்லாத இயல்பையுடையது. இதேப் போல இவ்வுலகில் நிலையில்லாமல் இருக்கக்கூடிய மனிதன் எதிர் காலத்திற்கு செல்வம் சேர்த்து வைப்பது என்பது முட்டாள்தனமாகும். நாம் சேர்த்த செல்வம் அடுத்துப் பிறவிக்கு தொடர்ந்து வருமா? என்றால் வராது

*என்பதே நியதி. வாழ்வின் நிலையாமையைப் புரிந்து மரணம் பற்றிய தெளிந்த ஞானம் வந்தால் மனிதனிடமிருந்து செல்வம் சேர்க்க வேண்டும் என்ற பேராசை மறைந்து விடும். இதனை*

*"வெய்யிற் கொதுங்க வுதவா வுடம்பின் வெறுநிழல் போற்*

*கையிற் பொருளு முதவாது காணும் கடைவழிக்கே"*[14]

*(கந்தர் அலங்காரம் 18)*

*வெயிலுக்கு ஒதுங்கி நிற்க உதவாத இந்த உடலின் பயனற்ற நிழலைப் போல இறுதியில் உயிர் பிரியும் காலத்தும் கைப்பொருள் உதவாது என கந்தர் அலங்காரத்தில் செல்வம் நிலையற்றது என்பதை அருணகிரியார் கூறுகிறார். நாலடியாரில் பொருளானது யாரிடமும் நிலையாக நில்லாமல் வண்டியின் சக்கரம் போல் மேலாகவும் கீழாகவும் மாறி மாறி வரக்கூடியதாகும் என்று எடுத்துக் கூறப்படுகிறது. பொருளானது நிலைத்து நிற்கும் தன்மையுடையது அன்று என்பதை நாம் தெரிந்துக் கொள்ள வேண்டும். நல்ல தருமங்கள் செய்யாமல் பொருட்களை பாதுகாத்து வைப்பவர்கள் இறுதியில் அதை இழக்கத்தான் வேண்டும். நாம் இந்த உலகத்தில் பிறக்கும் போது எதையும் கொண்டுவரவில்லை. அதேப் போல் இறக்கும் போதும் எதையும் எடுத்துக் கொண்டு போவதும் இல்லை என்பதை அறிந்து வாழ்க்கையானது நிலையற்றது என்பதை அறிய வேண்டும். நம்மிடம் பொருள் அதிகம் சேரும் போது நான், எனது, என்னுடையது தனது என்று ஆணவமாகச் சொல்லிக் கொண்டு திரிகிறோம். ஆனால் நம்மிடம் இருக்கும் அனைத்துமே இவ்வுலகிலிருந்து எடுக்கப்பட்டது என்பதை உணரவேண்டும் இதையே கீதையில்*
*"எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு?*[15] *(கீதாச்சாரம்)*

*எதை நீ எடுத்துக் கொண்டாயோ அது இங்கிருந்து எடுக்கப்பட்டது.*

*எதை நீ கொடுத்தாயோ அது இங்கேயே கொடுக்கப்பட்டது.*

*எது இன்று உன்னுடையதோ அது நாளை மற்றொருவருடையதாகிறது.*

*மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும். "இதுவே உலக நியதி"*[16]
*(கீதாச்சாரம்)*

*என்று அறிவுறுத்துகிறது. நாம் வாழ்வதற்கு தேவையான பொருளை மட்டுமே வைத்துக் கொண்டு மற்றதை வறியவர்களுக்கு கொடுத்து உதவ வேண்டும். அதில் மட்டுமே நிலையான மகிழ்ச்சி உள்ளது.*

முடிவுரை

மனிதனுடைய தேவைகள், விருப்பங்கள், எதிர்பார்ப்புகள் ஆகியவை கணக்கிலடங்கா. ஆனால் அவை நிலையானதல்ல மாறிக் கொண்டே இருக்கும் தன்மையுடையது. வாழ்க்கையின் உண்மை தன்மைகளை உள்ளவாறு அறிந்து வாழ்வது தான் வாழ்க்கை. நாம் வாழ்கின்ற இந்த அழகான வாழ்க்கையில் உண்மை, நேர்மை, நியாயம், பிறருக்கு உதவுதல் போன்ற நல்ல குணங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். அழகான இந்த உலகில் வாழும் நாள் வரை நல்ல செயல்களைக் கடைப்பிடித்து தீய செயல்களை நீக்கி அறநெறிகளை பின்பற்றினால் நல்ல வீடுபேற்றினை அடையலாம். மனிதன் தன் இறந்தகாலப் பிடிப்பும், நிகழ்காலச், சிந்தனையும், எதிர்காலக் கண்ணோட்டத்தையுமே இலட்சியமாக கொண்டு வாழ்கிறான் இவையெல்லாம் நம் உடலை விட்டு உயிரானது பிரியும் வரை மட்டுமே நிகழக் கூடியது என்பதை உணருவதில்லை. இதை உணர்ந்தால் மனித சமுதாயத்தில் கோபம், பொறாமை, கர்வம், அகங்காரம், இவையெல்லாம் நம்மை விட்டு அகன்றுவிடும் என்பது நிச்சயமானது.

அடிக்குறிப்புகள்

1. வளையாபதி,குண்டலகேசி – மூலமும் உரையும் – முனைவர்.கமலா முருகன் – சாரதா பதிப்பகம்.
2. திருமந்திரம் – மூலமும் எளிய உரையும் – புலவர் அடியன் மணிவாசகன் - சாரதா பதிப்பகம்.
3. வளையாபதி,குண்டலகேசி – மூலமும் உரையும் – முனைவர்.கமலா முருகன் – சாரதா பதிப்பகம்.
4. நாலடியார் - மூலமும் உரையும் – எஸ்.கௌமாரீஸ்வரி – சௌரா ஏஜென்ஸீஸ்.
5. நற்றிணை –மூலமும் உரையும்-முனைவர்.கு.வெ.பாலசுப்பிரமணியன் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.
6. மேலது.
7. திருக்குறள் – எஸ்.கௌமாரீஸ்வரி - சாரதா பதிப்பகம்.
8. மணிமேகலை - மூலமும் உரையும் – புலியூர்க் கேசிகன் - சாரதா பதிப்பகம்.
9. மேலது.
10. சித்தர் பாடல்கள் – சித்தர்களின் வாழ்வும், வாக்கும் – ஜெகதா – ராமையா பதிப்பகம்.
11. நாலடியார் - மூலமும் உரையும் – எஸ்.கௌமாரீஸ்வரி – சௌரா ஏஜென்ஸீஸ்.

12. மேலது.
13. புறநானூறு - மூலமும் எளிய உரையும் (புத்தகம்-1) –
முனைவர்.கு.வெ.பாலசுப்பிரமணியன் – நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.
14. கந்தர் அலங்காரம் – இணையம்
15. கீதாச்சாரம் – இணையம்.
16. மேலது.